| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **317/2008** |
| தேதி | : | **05.03.2026.** |
| பெயர் | : | **சரவணன் த/பெ சுப்பிரமணி** |

**பி.வா.த.சா.1 (DW1) மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**
**(**சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது**. )**

**பி.வா.த.சா.1. (PW1) - குறுக்கு விசாரணை:**

1) வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள வாதுரை மற்றும் எனது எதிர் உரை மற்றும் எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். தாவா சொத்தின் புல எண் 71/5B, 71/6B விஸ்தீரணமானது 0.03.5 ஏர்ஸ் மற்றும் 0.09 ஏர்ஸ் முறையே ஆகும் என்றால் எனக்கு புல எண்கள் சரியாக தெரியவில்லை. விஸ்தீரணம் சுமார் 30 சென்ட் நிலம் இருக்கலாம். தாவா சொத்தானது சின்னப்பஞ்சேரி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான்.

2) தாவா சொத்தானது ஆதியில் வாதியின் தந்தை சுப்பன் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி சுப்பன் என்பவர் 21.03.1960 ம் தேதி கிரயம் பெற்றார் என்றால் சரிதான். சுப்பன் என்பவரின் மனைவியின் பெயர் அண்ணம்மாள். அவருக்கு இரண்டு மகன்கள் நடராஜன், மாணிக்கம் ஆவர். அவருடைய மகளின் பெயர் சரோஜா ஆகும். தாவா சொத்தின் விவரங்கள் அனைத்தும் எனது தந்தைக்கு தான் தெரியும், அவர் தான் தாவா சொத்தினை வாங்கினார், எனக்கு நேரடியாக தெரியாது எந்த விவரமும் தெரியாது.

3) மேற்கூறிய சுப்பன் என்பவர் தாவா சொத்தின் மீது தனது மனைவியின் பெயரில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் செட்டில்மெண்ட் எதுவும் எழுதவில்லை. தான செட்டில்மெண்ட் எழுதியவிவரங்கள் எனக்கு தந்தை எதுவும் கூறவில்லை , தாவா சொத்தினை எனக்கு விற்பனை செய்த விற்பனையாளர் கூறவில்லை, எனது வழக்கறிஞர் தான் அதை பற்றி கூறினார். மேற்கூறிய சுப்பன் என்பவர் இறந்த பின்னர் தாவா சொத்தின் பட்டாவானது அண்ணம்மாள், நடராஜன் மற்றும் மாணிக்கம் ஆகியோரின் பெயரில் கூட்டாக இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது.

4) இவ்வழக்கு 2001 ம் ஆண்டு பூந்தமல்லி நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்

267/2001 என்று தாக்கல் செய்யப்பட்டு பின்னர் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 317/2008 என்று மாற்றம் அடைந்து இவ்வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் இந்நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண் 317/2008 வந்த பின்னர் தான் தெரியும். பூந்தமல்லியில் நடந்த வழக்கு விவரங்கள் எனக்கு தெரியாது. எனது தந்தை தான் பூந்தமல்லி நீதிமன்றத்தில் இவ்வழக்கை நடத்திவந்தார்.

5) இவ்வழக்கின் வாதி எனது தந்தை மற்றும் மாணிக்கம் என்பவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு (வாதசாஆ 1 ) அனுப்பிய விவரம் எனக்கு தெரியாது. எனது தந்தைக்கு தெரிந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. மாணிக்கம் கூறியிருக்கலாம். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு வாதசஆ 1 க்கு எனது தந்தை பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பியவாறு எனக்கு தெரியவில்லை. மேற்படி வாதசாஆ 1 ல் உள்ள விவரம் தாவா சொத்தில் பாகம் கேட்டு அனுப்பியிருந்தார்கள் அது பற்றி எனக்கு தெரியும்.

6) வாதசாஆ 1ல் தாவா சொத்தினை எனது தந்தை வாங்க முற்படுவதாகவும், மீறி வாங்கினால் வாதியை கட்டுப்படுத்தாது என்றும் அந்த அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. தாவா சொத்தினை எனது தந்தை 2002 ம் ஆண்டு வாங்கினார்.தாவா சொத்தினை நடராஜனின் வாரிசு தாரர்களான அவர்கள் மனைவி பத்மா, மகள் பவானி மற்றம் மாணிக்கம் நடராஜனின் தம்பி ஆகியோரிடமிருந்து வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாங்கினார் என்றால் சரிதான்.

7) தாவா சொத்தில் 2002 ல் பதியப்பட்ட கிரயப்பத்திரத்தை நான் பாரக்கவில்லை. மேற்கூறிய மூன்று நபர்களும் அந்த கிரயப்பத்திரத்தில் கையெழுத்து செய்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. 2002ல் எனது தந்தையால் பெறப்பட்ட கிரயப்பத்திரத்தை இந்நீதிமன்றத்தில் எனக்கு புல எண்கள் மற்றும் இதர விவரங்கள் தெரியாததால் அதன் சான்றிட்ட நகலை பெற்று தாக்கல் செய்ய இயலவில்லை. தாவா சொத்தினை வாங்குவதற்கு முன்பாக எனது தந்தை வழக்கறிஞர் எவரேரிடம் கருத்து பெற்றாரா என்ற விவரம் எனக்கு தெரியாது.

8) தாவா சொத்தினை கிரயம் பெறும்போது எனது தந்தையானவர் அதன் விற்பனையாளரிடம் இருந்து சுப்பன் அவரின் வாரிசுதாரர் சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழ் பெற்று அதன் நகலுடன் தான் கிரயம் பெற்றாரா என்றால் ஆமாம். அதை பற்றி எனது தந்தை மற்றும் எனது வழக்கறிர் கூறினார்கள். வாரிசுதாரர் சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழ்

தற்போது என்னிடம் இல்லை என்னால் தாக்கல் செய்ய இயலாது. நடராஜன் என்பவர் இறந்த தேதி மற்றும் வருடம் எனது தந்தைக்கு தான் தெரியும். எனக்கு தெரியாது. வாரிசுதாரர் சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழ் நான் பார்த்தது இல்லை. அது எங்களிடம் இருக்கிறதா என்று தெரியாது.

9) நடராஜன் என்பவர் திருமணம் நடைபெறாமல் இறந்தவிட்டார் என்றால் எனது தந்தைக்கு தான் தெரியும். எனது தந்தை 2010 ம் ஆண்டு இறந்துவிட்டார். 2001 முதல் 2010 ம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் எனது தந்தையானவர் இவ்வழக்கு மற்றும் தாவா சொத்தின் விவரங்கள் பற்றி குறிப்பாக எதுவும் கூறவில்லை. பொதுவாக ஒரு சொத்தினை கிரயம் பெறும்போது அதனுடைய நன்மையான விசயங்கள் மற்றும் பாதகமான விசயங்கள் ஆராய்ந்து தான் வாங்கவேண்டும் என்றால் சரிதான். விற்பவர்கள் எப்போதும் சாதகமான விவரங்களை கூறிதான் விற்பனை செய்வார்கள். சொத்தினை வாங்குபவர்கள் பாதகமான விவரங்கள் தெரிந்து அதை வாங்கினால் அதில் லாபநோக்கத்தோடு தான் வாங்குவார்கள் என்றால் சரிதான்.

10) பாதகமான விவரங்கள் தெரியாமல் வாங்கிவிட்டால் அது வாங்கியவர்கள் ஏமாந்துவிட்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தினை சுப்பனின் ஆண் வாரிசுகளான நடராஜன் மற்றம் மாணிக்கம் ஆகியோர் அவர்கள் தந்தை மகளுக்கு கல்யாணம் செய்துவைத்த காரணத்தினால் தாவா சொத்தின் மீதுள்ள உரிமையை அவர்கள் இருவருக்கு கொடுத்துவிட்டதாகவும் அதன் அடிப்படையில் விற்பனை செய்வதாகவும் கூறி கிரயம் செய்தார்கள். மேற்சொன்ன விவரங்கள் எதுவும் எழுத்து மூலமாக நடைபெறவில்லை வாய் மொழியாக தான் நடைபெற்றது.

11) எனது தந்தை சரோஜாவிற்கு தாவா சொத்தின் மீது இருந்த உரிமை பற்றி தெரிந்தே தான் வாங்கினார் என்றாலும், சரோஜாவை தவித்து வாங்கியதால் தாவா சொத்தின் மீது லாபம் அடையவேண்டும் என்ற நோக்கத்தோடு வாங்கினார் என்றாலும் அதனால் தான் சுப்பனின் இறப்பு சான்றிதழ மற்றும் வாரிசு சான்றிதழ் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

12) சுப்பனின் முதல் மகனான நடராஜன் என்பவருக்கு திருமணம் நடைபெறவில்லை என்றாலும் அவரின் மனைவி பத்மா மற்றும் அவரின் மகள் பவானி என்று பொய் சங்கதிகளை கூறி கிரயம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி

மாணிக்கம் இறந்த பின்னர் அவரின் வாரிசு தாரர்களான பிரதிவாதிகள் 9 முதல் 13 வரை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. நான் கூறிய நடராஜனின் வாரிசான பவானி என்பவர் மாணிக்கத்தின் மகள் என்றாலும், அவர் இவ்வழக்கின் 12ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு முறையாக அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு அவர் நீதின்றத்திற்கு வரவில்லை என்றால் சரியா அது பற்றி எனக்கு தெரியாது.

13) நான் கூறியவாறு பவானி நடராஜனின் மகள் தான் என்றாலும் அது உண்மையான சங்கதி என்றால் மாணிக்கத்தின் மகள் பவானி என்று அழைப்பாணை சார்பு செய்யப்பட்ட பின்னர் அவர் இந்நீதிமன்றத்திற்கு வந்து அது பொய் என்று சாட்சியம் அளித்திருப்பார் என்றால் சரியல்ல. 2011 ம் ஆண்டு பவானிக்கு அழைப்பாணை செல்லும்போது அவரின் வயது 24 எனவே அவர் 2002 ம் ஆண்டு மைனராக இருந்திருப்பார் என்றாலும், ஆகவே அவரால் கையெழுத்திட்டிருக்க முடியாது என்றாலும் சரியல்ல.

14) வாதி சம்பந்தமான விவரங்கள் பத்தி 1, 2, 3 அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியாது 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதில் உரையின் அடிப்படையில் அதன் விவரங்களை வைத்து தான் நான் பிரமாணவாக்குமூலம் மற்றும் எனது பதில் உரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். பத்தி 4ல் நடராஜன் என்பவரின் வாரிசு தாரர்கள் தரப்பினர்களாக இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்று குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவர்கள் போலியானவர்கள் என்பதால் இவ்வழக்கில் சேர்க்கவில்லை. தாவா சொத்தினை 2005 ம் ஆண்டு எனது தந்தை உயிருடன் இருக்கும்போது சரவணன் என்பவருக்கு கிரயம் செய்யப்பட்டுவிட்டது.

15) மேற்சொன்ன சரவணன் இவ்வழக்கில் 14 ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றாலும், அவர் இறந்த பிறகு அவரின் தாயார் 15 ம் பிரதிவாதியாக இவ்வழக்கில் இருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியும். நாங்கள் சரவணனுக்கு விற்பனை செய்த கிரயப்பத்திரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தினை ஆதியில் சுப்பன் இறந்த பின்னர் அவரின் மனைவி அண்ணம்மாள், மகன்கள் மற்றும் மகளான வாதி ஆகியோர் கூட்டாக தான் அனுபவித்துவந்தார்கள் என்றால் சரியல்ல.

16) நடராஜன் இறந்த பின்னர் அண்ணம்மாள் மற்றும் மற்றொரு வாரிசான மாணிக்கம் மற்றம் வாதி ஆகியோர் தான் அனுபவத்தில் இருந்துவந்தார்கள் என்றால் சரியல்ல. வாதியானவர் சுப்பனின் வாரிசு என்ற அடிப்படையில் தாவா சொத்தில் அவருக்கு சரிபாதி

உரிமை உள்ளது என்றால் சரியல்ல. எனவே வாதி கோரியபடி செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி கையொப்பம் **Sd/.** சரவணன்

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.